பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | ஐப்பசி 26 | முறை 2 | இதழ் 272
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 11-11-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-11-11
PERIODICALS DIVISION
LIBRARY

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க

## கொள்ளை வழக்கு: எதிரிகள் இருவர் ஆஜராகவில்லை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க கொள்ளைவழக்கில்நேற்று நீதிமன்றத்தில் இரு எதிரிகள் ஆஜராகவில்லை.

இவ்வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்தில் 40,000 ரூபா கொள்ளையடித்ததாக குமைச்சந்திரன், க. குமணகரன், உதயணன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் எஸ். சோமசுந்தரம், ராஜராஜேஸ்வரன் தங்கராசா, க. சிவனருள்சுந்தரம்

(8ம் பக்கம் பார்க்க)

★ 1983 பொதுத்தேர்தலின் பின்னர்வரும் ஆட்சியிலும்

# அமைச்சரவை நியமனம் எனக்கே அதிகாரம்!"

## கண்டியில் ஜனாதிபதி

(கண்டி)

"1983ல் நடைபெறும் பொதுத்தேர்தலில் எந்தக்கட்சி வெற்றிபெற்றாலும் நான்தான் அப்பொழுது ஜனாதிபதியாக இருப்பேன். அந்தநேரத்தில் அமைச்சரவையை நியமிக்கும் சிறப்புரிமையும் எனக்குத்தான் இருக்கும்" என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று கண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

1983 தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சிதான் ஆட்சிக்கு வரும் என்று நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி திரு. ஜயவர்த்தன;

"அடுத்த பொதுத்தேர்தல் விகிதாசார முறையில் நடைபெறுவதால் எந்தக் கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்காது. ஆகவே இப்பொழுதுள்ள அரசியலமைப்பே தொடர்ந்து இருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு சிறந்த தலைமைப்பதவியோ, கட்டுப்பாடோ கிடையாது. எதிர்காலமும் இக் கட்சிக்கு சூன்யமாகவே இருக்கிறது" என்றும் கூறினார்.

## தேசிய எதிர்ப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உட்பட 16 இயக்கங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் தேசிய எதிர்ப்புதின வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

இவ் எதிர்ப்பு இயக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் அங்கமான தமிழ் இளைஞர் பேரவையும் கலந்து கொள்ளமாட்டாது.

காலை முதல் பிற்பகல் வரை யாழ். கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தில் சத்தியாக்கிரகமும்,

(8ம் பக்கம் பார்க்க)

## அமரர் குலசிங்கத்திற்கு பிரதம நீதியரசர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அமரர் குலசிங்கம் நேர்மையும், திறமையும் மிக்க ஒருவர் அவரை அப்பீல் நீதிமன்றத்தில் வழக்கொன்றை திறமையாக வாதாடியபோது முதல் முதலில் அறிந்துகொண்டேன்.

அமரர் சட்டத்தரணி ஏ. வி. குலசிங்கத்தின் உருவப்படத்தை திரை நீக்கம்செய்து வைத்த பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில், பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் மேலும் கூறியதாவது:

வழக்கொன்றில் அவர் தானே உயர் நீதிமன்றத்தில் ஆஜரானார் அச்சமயம் அரச சட்டத்தரணிகள், அவரை ஒரு சாதாரண சட்டத்தரணியாக கணித்துக்கொண்டனர். அவ்வழக்கில் அவர்கள் அதிககவனம் செலுத்தவில்லை.

அமரர் குலசிங்கம், அவ்வழக்

(8-ம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளையில் 'ஓட்டோ ரிக்ஷோ' சேவை

### ப. நோ. கூ. சங்கம் ஆரம்பிக்கும்

(பலாலி)

தெல்லிப்பளை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் 'ஓட்டோ ரிக்ஷோ'க்களை போக்கு வரத்துச் சேவையில் ஈடுபடுத்தவிருக்கிறது. பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்தின் ஆரம்பத்தில் மூன்று 'ஓட்டோ ரிக்ஷோக்கள்' சேவையில் ஈடுபடும். பரீட்சார்த்த திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் படிப்படியாக ரிக்ஷோக்களின் தொகை அதிகரிக்கப்படும்.

எரிபொருள் விலை அதிகரிப்பினால் போக்குவரத்தில் இப்பகுதி பொதுமக்கள் அனுபவித்துவரும் கஷ்டம் இதனிமித்தம் ஓரளவு நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவையை இதன்மூலம் வளங்கக் கூடியதாக இருக்குமென சங்கப் பொதுமுகாமையாளர் திரு. எஸ். நவரத்தினம் கருத்துத்தெரிவித்தார்.

சங்கப் பொதுச் சபையின் தீர்மானப்படி நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு ஆரம்பத்தில் ஒரு லட்ச ரூபாய்வரை செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## "சமுதாயத்தைச் சீர்திருத்துவதன் மூலமே குற்றச்செயல்களைத் தடுக்க முடியும்"

### குற்றவியல்தடுப்பு கருத்தரங்கில் யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

"சிறைச்சாலைக் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து, சீர்திருத்துவதிலும் பார்க்க, சமுதாயம் முழுவதையும் சீர்திருத்துவது அவசியம். இப்படிச் செய்வதன் மூலம் குற்றச் செயல்களை தடுக்க முடியும்"

யாழ் அரசாங்க செயலகத்தில் நடந்த குற்றவியல் தடுப்புக் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறினார்.

யாழ் ரோட்டரி கழகத்தினால் நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கை, அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

யாழ். ரோட்டரிக்கழக தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் தமது தலைமையுரையில் தேசிய கழகம் விடுத்த வேண்டுகோளை ஏற்று சிறைச்சாலை பகுதியினரின் உதவியுடன் இக்கருத்தரங்கு நடைபெறுவதாகக் கூறினார்.

சிறைச்சாலை ஆணையாளர் திரு. ஜே. பி. தெல்கொட பேசுகையில்; கடந்த 30 வருடகாலத்தில் ஜனத்தொகை 90 வீதம் அதிகரித்துள்ளதாகவும் அதேநேரம் குற்றச் செயல் 169 வீதம் அதிகரித்திருப்பதாகவும் புள்ளிவிபரங்களுடன் காட்டினார்.

ஐ. நா. ஆலோசகர் டாக்டர் வி. என். பிள்ளை பேசுகையில் கூறியதாவது: பொருளாதார அபிவிருத்திசெய்வதனால் மட்டும் குற்றங்களை தடுத்துவிடமுடியாது நீதிபரிபாலனத்தில் காலம் தாமதப்படுவதால் நீதி கிடைப்பதில்லை. இதுவும் ஒரு காரணமாகும்" என்றார்.

யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் கூறியதாவது: "குற்றம் புரிந்தவரை நீதிமன்றம் கொண்டுவருவதில் காலம் செல்வதனால் தான் தடை ஏற்படுகிறதேயொழிய நீதிமன்றத்தினால் அல்ல. ஒருவர் முதல் குற்றம் புரியும்போது சிறைக்கு அனுப்பாமல் நன்னடத்தையில் விட்டால் 2 ம்முறை குற்றம் செய்யாமல் தடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

குறுகிய காலம் சிறைக்குச் செல்பவர் திரும்பவும் செல்ல தயங்காமல் இருக்கக்கூடும்" என்றார்.

உதவி பொலிஸ் அதிபர் ஜனாப் நிசாம் கூறியதாவது;- "குற்றம் புரிதலைக் குறைக்கலாமே ஒழிய முற்றாகத் தடுக்க முடியாது. மக்கள் தற்பாதுகாப்புக்கு சட்டப்படி என்ன செய்யலாம் என அறிந்து அவற்றை செய்ய தயங்கக்கூடாது. அப்படி செய்தால் குற்றவாளி உடனடியாகவே மக்களாலேயே தண்டிக்கப்படுவார்" என்றார்.

யாழ் குடும்ப நீதிமன்ற நீதிபதி திரு. எம். யேசுரத்தினம் கூறியதாவது: மக்களுக்கும் பொலிசாருக்குமுள்ள தொடர்பை ஆராயுமுன்னர் பொலிஸாருக்கும், சிறைச்சாலை பகுதியினருக்குமுள்ள நிலையை தெளிவுபடுத்த வேண்டும். பொலிஸாருக்கு சட்டத்தரணிகளின் உதவி வழங்கப்படவேண்டும் ஏனெனில், குற்றங்களை நிரூபிக்க கஷ்டம் ஏற்படுகிறது" எ

அங்கீகாரமில்லாமல் வீதி திருத்தவேலை

## யாழ். மாநகர சபையில் ஏற்பட்ட பரபரப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அங்கீகாரமின்றி ஒரு வட்டாரத்தில் வீதி வேலைகளுக்கு பொருட்கள் பறிக்கப்பட்டுள்ளதென்ற தகவலை உறுப்பினர் ஒருவர் நேற்று நடந்த உப வரவு செலவுத் திட்ட விசேட கூட்டத்தில் வெளியிட்டபோது சபையில் பரபரப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அதுபற்றிய சர்ச்சையும் நடைபெற்றது.

அடுத்த கூட்டத்தில் இது பற்றிய அறிக்கை வெளியிடப்படும் என்று முதல்வர் தெரிவித்ததைத் தொடர்ந்து அமைதி ஏற்பட்டது.

யாழ். மாநகரசபை உப வரவுசெலவுத் திட்ட கூட்டம் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

### உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

உறுப்பினர்கள், அடுத்தடுத்து வீதிகள் மின்சார ... கேடுகளினால் மக்கள் ... படுவதாகவும், வேலைகள், அறைகுறையிலிருப்பதால் வரியிறுப்பாளர் அவலப்படுவதாகவும் கூறினர்கள்

தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினரான திரு. எஸ். சண்முகராசா கூறியதாவது: "நிதிக்குழுவும், சபையும் மதிப்பீடு செய்யப்பட்டு, அங்கீகரித்த வேலைகளுக்குத் தான் பொறுப்பு. மதிப்பீடு செய்யப்படாத அங்கீகரிக்கப்படாத வேலைகளுக்கு ...

(8ம் பக்கம் பார்க்க)

## சங்கக் கிளையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை ப. நோ. கூ. சங்க கிளையின் கூரை பிரித்து சுமார் 8,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். அராலி வீதி, அலுமினியம் தொழிற்சாலை அருகில் சகல வசதிகளுடன் கல் வீடு வளவு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: அ. நவமணி 617, ஓட்டுமடம்சந்தி, யாழ்ப்பாணம். 7309

இலங்கையில் தருவிக்கப்படாத 3 இன் 1 நாஷனல் 14 அங். கறுப்பு, வெள்ளை .V. றேடியோ & கசெட் மூன்றும் சேர்ந்தது. 26-10-80ல் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. சீக்கோ 5 கைக்கடிகாரம் ஒன்று. விபரங்கட்கு: எஸ். என். பாலசிங்கம், 173. ஆழ்வார் ஒழுங்கை, காங்கேசன்துறை (சந்தி). 7318

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு சோடாவேன்விற்பனவுக்குபிள் போட்டு, காசுவாங்கக் கூடிய பொறுப்பான (சேல்ஸ்மேன்) விற்பனையாளர்களும் சோடா பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய கூலி ஆட்களும் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 7311

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசதியான வீடு வாடகைக்குத் தேவை. தனி வீடு விரும்பத்தக்கது. இடம், வாடகை, முற்பணம் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். டி. சாமுவேல், திருப்பதி ஹோட்டல், தாவடிச் சந்தி, கொக்குவில். 7313

## வகுப்புகள்

தராதரமும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படும் Icing, Cake Making, Speech, Drama வகுப்புகள் 15-11-80ல் ஆரம்பமாகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். விப்ஸ், 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம், 7308

## இலவசம்

பனம் விதைகள் நட்டு உண்டாக்க விரும்பும் அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம், அம்பலப் பெருமாள், கோணாவில் பகுதி மற்றும் குடியேற்றப்பகுதி மக்களுக்கு 12-11-80 புதன்கிழமை அன்று பனம் விதைகள் எமது வானத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும். தொடர்ந்து ஸ்கந்தபுரம் இராஜவைத்திய சாலையில் பனம்விதைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்' யாழ்ப்பாணம், 7299

## குத்தகைக்கு

இ. இராசசூரியர் கனகபுரம் கிளிநொச்சி என்னும் இடத்தில் சிறுபயிர் செய்கைக்கு 5 ஏக்கர் நிலம் வீடு கிணற்றுடன் 2 வருடக் குத்தகைக்கு கொடுக்கவுண்டு. மேற் குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 7317

## பொதுவரவேற்பு அளிக்கமுடிவு

(அரியாலை)

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் அரியாலையில் நடைபெற்ற பொது நிர்வாகசபையில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு பொது வரவேற்பளிப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு மகாசபைத் தலைவர் திரு. கே. கிருஷ்ணராசா தலைமைவகித்தார். (அ)

## வட்டுக்கோட்டைக் கிராமசபை கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் 18-11-80ம்திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப் பணமாக ரூபா 250/ம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 25/-ம், 13-11-80ம் திகதி பிற்பகல் 3-00 மணிக்குமுன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரங்களில் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதி இவ்வலுவலகத்திற்கும் ஒரு பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சிஉதவிஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

### வேலை விபரம்

1. சிறுவர் பூங்காவிற்கான உபகரணங்கள் வழங்குதலும், அமைத்துக்கொடுத்தலும்.
2. பல கூறுள்ள கடைக்கட்டிடத்திற்கு மின்சாரம் வழங்குதல்.
3. சிறுவர் பூங்காவிற்கு மின்சாரம் வழங்குதல்.

மு. சுப்பிரமணியம்,
நிர்வாகஸ்தர்.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை. 7296

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா கைம்பெண் அன்னபூரணத்தின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் மரணசாதனமில்லாதமரணச் சொத்தின் தத்துவகாரரை நியமிக்கும்படியான விண்ணப்ப விடயத்தில்

செல்லையா அருள்சுதன்,
மானிப்பாய்,
— மனுதார்.

வழ. இல தத்துவம் /3474

எதிராக

1. லக்ஸ்மன் வைரமுத்து இராசையா பெண் கிருபாநிதி,
2. லக்ஸ்மன் வைரமுத்து இராசையா இருவரும் மானிப்பாய், தற்பொழுது கனடா
3. செல்லையா தேவமகிபன், கனடா.

— எதிர்மனுதார்கள்.

மேலே கூறப்பட்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட காலஞ் சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டது. இம்மன்றில் அதன் பிரகாரம் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்விண்ணப்பத்தில் அக்கறையுள்ள நபர்கள்எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு முன்னராக இந் நீதிமன்றில் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் இறுதிக்கட்டளையாகக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

வரையப்பட்டது.
வ. மயில்வாகனம்.
மனுதாரின் சட்டத்தரணி.

3 2

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி காயத்திரி

மண்டைதீவு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த பரராசசிங்கம் சிறீகாந்தா தம்பதிகளின் அருமைப் புதல்வி காயத்திரி தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (11-11-80) தமது இல்லத்தில் கொண்டாடுகிறூர். அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, ஊற்றன் பெரியப்பா, பெரியம்மா, ருஜா அண்ணு, இந்து அண்ணு, சிறீஸ் பாலுச்சித்தப்பா, அத்தை வசந்தி ருஜா மாமா, பன்னீர் மாமா, அண்ணு கிருஷ்ணன் மற்றும் உற்ருர், உறவினர் திருவெண்காடு சித்திவிநாயகன் அருள்பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகிறூர்கள். 7316

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றத்தில்

கரம்பன் கிழக்கு, காளிகோவிலடியைச் சேர்ந்த அம்பலவாணர் கணபதிப்பிள்ளை பெண் சாரதாம்பாளின் மரணச் சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் மரண சாதனமில்லாத மரணச் சொத்தின் தத்துவகாரரை நியமிக்கும்படியான விண்ணப்ப விடயத்தில்

— மரணமெய்தியவர்

சுர்தரம்பிள்ளை தாமோதரம்பிள்ளை, காளிகோவிலடி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

— மனுதார்.

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: ரி/24

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆந் நாளன்று முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை என் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3-ம் திகதி,

நீதிமன்றக்கட்டளைப்படி
க. குலஞானம்,
(ஒப்பம்)
பதிவாளர்

வரையப்பட்டது.
வ. மயில்வாகனம்,
[ஒப்பம்]
மனுதாரின் சட்டத்தரணி.

7301

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல காட்வேயர், எலெக்றிக்கல் (Hardware Electrical) ஸ்தாபனத்தில் விற்பனையாளர் (Counter Clerk) தேவை. கீழ்க்காணும் விபரங்கள் அடங்கியவராக இருத்தல்வேண்டும்.

I. விற்பனை அனுபவம் ஐந்து வருடத்துக்குக் குறையாமலும்,
II. G. C.E. சித்தியுள்ளவராகவும் (கணிதம், வர்த்தகம், ஆங்கிலம்),
III. வயது 25-ல் இருந்து 40க்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.
IV. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

முடிவுத் திகதி: 18-11-80.

விளம்பர இல. 141, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

## ஈட்டு வழக்கில் விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: ஈடு 14523.
1. சு. பொ. கந்தையா,
247, நாவலர் வீதி-யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. தி. பத்திநாதன்
2. பெண் திரேசம்மா-இல. 6, 3-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை.

எதிராளிகள்

14523ம் இலக்க ஈட்டு வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980ம் ஆண்டு காாத்திகை மாதம் 28ம்திகதி முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 5305/-ம், இன்னும் ரூபாய் 3000க்கு 4-9-74 துவக்கம் 23-10-75 வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 15 வீதவட்டியும், அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டு செலவு ரூபாய் 593-45 சதமும், இதில் தீர்வைத் தொகையாய் ரூபாய் 1000/-மும் கோட்டுச்செலவால் ரூபாய் 150/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை ''நாவலடியும், மறுபிரிவுகளும்'' பர. நில. இலா 1 குளி 8. இது 2-11-64ல் உலாந்தா P. S. சேனாதிராசாவால் 181-ம் இலக்கப் படத்தில் 2 என்னும் எண்ணுல் காட்டப்பட்டுள்ளது வீடும், கிணறும் இதில் இருக்கிறது. இதற்கு எல்லை கிழக்கு தொம்மை வயித்தியின் உரிமைக்காரருக்கும் பிலிப்பு மரியாம்பிள்ளை பெண் ரோசம்மாவிற்கும் உரிய ஆதனங்கள். வடக்கு ஒழுங்கை. மேற்கு நீக்கிலான் யக்கோ பெண் இன்னேசித்தினது ஆதனம். தெற்கு மரியாம்பிள்ளை செபஸ்தியின் ஆதனம். இதடங்கலும்.

ப. நா. தருமலிங்கம்,
கொம்மிஷனரும், ஏலவிற்பனையாளரும்.

167 / 1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு,
31-10-80. 7305

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 11115

(1) இராமலிங்கம் சச்சிதானந்தமும்
(2) பெண் பரமேஸ்வரியும்
இருவரும் உடுவில் தெற்கு சுன்னுகம்

வழக்காளிகள்

எதிராக

(1) முருகேசு செல்லத்துரையும் (2) கனகம்மாவும்
(3) முத்து சங்கரப்பிள்ளையும் அனைவரும் 216, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11115-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை, 1980-ம்ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதி புதன்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 7,200/- பின் 20—9—69 தொடக்கம் 5-5-70 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 434 சதம் 70 இதில் கட்டப்பட்டது- 20-5-70இல் கொடுத்த ரூபா 1000/- 22-3-78 இல் கொடுத்த ரூபா 2000/- 27-2-79இல் கொடுத்த ரூபா 1000/- 19-7-79இல் கொடுத்த ரூபா 1000/- கழிவாக.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்குஇறை ''மூத்தான்வளவு'' நிலப்பரப்பு ஒன்று குளி ஒன்பதுடன் எட்டில் ஒன்றும் (நில. பர 1 குளி 9 1/8 ம் வீடும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசிப் டங்கும் செய்பயிர் வான்பயிர்களும் இந்த நிலப்பரப்பு ஒன்று குளி ஒன்பதுடன் எட்டில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு பொன்னு செல்வத்துரைக்குரிய ஆதனம், வடக்கு முத்துசாமி பெண் செல்லம்மாவிற்குரிய அதனம். மேற்கு கஸ்தூரியார் ரோட்டு, தெற்கு இளையதம்பி பெண் செல்லம்மாவிற்குரிய ஆதனம். இதடங்கலும்.

''விதாரன வளவு''
சித்தன்கேணி
27-10-80.

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்
7315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபடானில் மீண்டும் கடும்சமர்;

# நிலவாயு தாங்கி சேதம்

## 74 ஈரானியர் - 11 ஈராக்கியர் பலி!

லண்டன், நவ. 10 ஈரானின் அபடான் எண்ணெ நகரைத் தாக்கிய பீரங்கிசள் கொண்ட ஈராக்கிய ஹெலிக்கொப்டர்கள் பாரிய நிலவாயு தாங்கி ஒன்றையும் நிலவாயு விநியோகிக்கும் குழாய் ஒன்றையும் முற்ருக அழித்து விட்டதாக ஈராக் இராணுவ பீடம் அறிவித்துள்ளது.

மீண்டும் கடும் சண்டை ஏற்பட்டுள்ள இப்பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதலின் போது 71 ஈரானிய துருப்புக்கள் பலியாகின என்றும் 11 ஈராக்கிய துருப்புக்கள் பலியாகின என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், தனது கடற்படை ஈராக்கின், ஏல்பக்கர், ஹெளர், அலமாயா ஆகிய எண்ணெ ஏற்றும் துறைமுகங்களைத் தாக்கி, எண்ணெ ஏற்றும் சாதனைகள் யாவற்றையும் முற்ருக அழித்துவிட்டதாக ஈரான் அறிவித்துள்ளது.

இத்துடன் தத்தமது படைகள் மேலும் பல புதிய வெற்றிகளைப் பெற்றுள்ளதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன. (இ)

சாவகச்சேரி நன்னீர்த்திட்டம்:

## அமெரிக்க உபதூதுவர் பார்வையிட்டார்

(மட்டுவில்)

''மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தை விரும்பும் அமெரிக்கா, மக்கள் அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களையும், உயர் வாழ்வுக்கான நன்னீர்த் திட்டத்தையும் செயற்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது''

இவ்வாறு சாவகச்சேரிக்கு விஜயம் செய்த இலங்கை, அமெரிக்க உப தூதுவர் கலாநிதி ஏ. கார்க்கிலிஸ் கூறினர்.

சாவகச்சேரி நகரசபை அமெரிக்க நாட்டு உதவியுடன் சுமார் 4 கோடி ரூபா செலவில் பாரிய குடிநீர் விநியோகத் திட்டம் ஒன்றை சாவகச்சேரியில் செயற்படுத்தவுள்ளது. இத்திட்டத்தைப் பார்வை யிடுமுகமாகவே, அமெரிக்க உப தூதுவர் சாவகச்சேரிக்கு விஜயம் செய்தார்.

உள்ளூராட்சி விசேட ஆணையாளர் திரு. அன்டன் அல்பிரெட், நீர்வள ஆராய்ச்சிப் பொறியியலாளர் திரு. குணரத்தினம் ஆகியோருடன் அமெரிக்க உப தூதுவர் சாவகச்சேரிக்கு விஜயம் செய்தார்.

சாவகச்சேரி எம், பி. திரு. வி. என். நவரத்தினம், அமெரிக்க உப தூதுவர் கலாநிதி கார்க்கிலிசை தமது இல்லத்தில் வரவேற்ருர்.

இதைத் தொடர்ந்து, கலாநிதி கார்க்கிலிஸ் சாவகச்சேரி நகரசபைக்கு விஜயம் செய்தார். நகரசபைஉறுப்பினர்கள், தலைவர் திரு எஸ். ஜே. திரவிய நாயகம் ஆகியோர் அவரை வரவேற்று, கலை தேநீர் விருந்தளித்தனர்.

கலாநிதி கார்க்கிலிஸ் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது:-

''சமுதாய நலனுக்காகவே அமெரிக்க அரசு உழைத்து வருகிறது. இப்படியான தொண்டுகளைச் செய்ய எமக்குச் சந்தர்ப்பமளித்த இலங்கைக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும் என்ருர்.

தலைவர் திரு. எஸ். ஜே. திரவியநாயகம் தனது உரையில், 'அமெரிக்காவை இலங்கை நினைவுகூரும் வகையில் பல நினைவுச் சின்னங்கள் உள்ளன. குறிப்பாக, வடபகுதியில் அமெரிக்க மிஷன் பாடசாலைகள், வைத்தியசாலைகள், தேவாலயங்கள் அமைந்துள்ளன'' என்ருர்.

அமெரிக்க மிஷன் நிறுவிய சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியையும், தேவாலயத்தையும் கலாநிதி கார்க்கிலிஸ் பார்வையிட்டார்.

# ஈரானில் பெற்றேல்விலை மூன்று மடங்கு அதிகரிப்பு

## சீனி, மின்சாரம் உட்பட அத்தியாவசிய பொருட்கள் பங்கீட்டு அடிப்படையில்

தெஹ்ரான், நவ. 10 ஈராக்-ஈரான் யுத்தம் நீடித்துவருவதை அடுத்து ஈரானில் தனியார்துறை வாகனச் சொந்தக்காரர்களுக்கு விற்கப்படும் பெற்ரேலின் விலையை அதிகரிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடுத்த சனிக்கிழமை முதல் இவர்களுக்கான எண்ணெ விலை மூன்று மடங்காக அதிகரிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதே வேளையில் அரசாங்க வாகனங்கள், தொழிற்சாலைகளுக்கான பெற்ரேல் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றும் துணை அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

டீசல் விலையில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்றும் அவர் கூறினர்.

போர்நெருக்கடியை அடுத்து அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் பாவனையை கட்டுப்படுத்தும் பொருட்டு சீனி, மின்சாரம் உட்பட பல அத்தியாவசிப் பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் வழங்குவதென்றும் அரசு தீர்மானித்துள்ளது, இதுபற்றிய விபரம் எதுவும் இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. (இ)

### திருச்செந்தூர் புராணபடனம் அமைச்சர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பக்திநெறிக் கழக சார்பில் சங்கீதபூஷணம் சி. விநாசித்தம்பி, சைவப் புலவர் கு வி. மகாலிங்கம் ஆகியோர் மாவை ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் திருச்செந்தூர் புராண படனத்தில் பங்கு கொண்டுள்ளார்கள்.

இப் புராண பாராயணப் பணி சிறக்க இந்து சமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. வே. நா. சிவராசா, இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ.இராசதுரை சார்பில் பாராட்டுக் கடிதமொன்று அனுப்பியுள்ளார். (ஈ)

## இந்தியாவில் தங்கம் மிகவும் விலைகுறைவு

புதுடில்லி, நவ. 10 சர்வதேச சந்தையைவிட இந்தியாவில் தங்கத்தின் விலை மிகவும் குறைவாக இருப்பதால் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் தங்கம் கடத்துவது தற்போது நின்றுவிட்டது.

இவ்வாறு இந்திய மத்திய துணைநிதி அமைச்சர் திரு. சுவால் சிங் கித்தோடியா தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து தங்கம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை என்று கூறிய அவர் தங்கம் ஏற்றுமதிசெய்யப்படுகிறது எனத் தாம் கூறியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் விஷமத்தனமானது என்றும் கூறினர். (இ)

### 12வயதுச் சிறுமி பரிதாப மரணம்

(மட்டுவில்)

மருந்து என்று நினைத்து கிருமிநாசினியைக் குடித்த 12 வயதுச் சிறுமி சிவனேஸ்வரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும் மரணமானர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினர்.

சிறுமியின் தந்தையார் சாட்சியமளிக்கையில்; இறந்தவர் தன்னுடைய மகள் என்றும் சுகவீனமாக இருந்த அவர் மருந்துப் போத்தல் என்று எண்ணி தவறுதலாக கிருமிநாசினிப் போத்தலை எடுத்துக் குடித்துவிட்டார் என்ருர்.

சாட்சியத்தைப் பதிவு செய்து கொண்ட மரணவிசாரணை அதிகாரி விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்.

### இலவச கண்ணுடி வழங்க முயற்சி

(மன்னர்)

மன்னர் ஆஸ்பத்திரியில் இலவச கண் சத்திர சிகிச்சை பெற்ற சிலருக்கு இலவசமாக மூக்குக்கண்ணுடி வழங்க மன்னர் ஆஸ்பத்திரி அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகிருர்கள் என மன்னர் ஆஸ்பத்திரி கமிட்டித் தலைவர் ஜனப். என். எஸ். எம், கௌது பே. பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா கண் இழந்தோர் நலன் புரிச்சங்கத்தைச் சேர்ந்த கண் சத்திரசிகிச்சைவைத்தியர்கள்மன்னர் ஆஸ்பத்திரியில் வைத்து 100 பேருக்கு இலவச கண் சத்திரசிகிச்சை அளித்தனர். கண் சத்திரசிகிச்சை பெற்றவர்களை ஒரு வார காலம் பார்வையிட்டனர்.

கொழும்பு கண் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த திருமதி சிவயோகம் சிறீஸ்கந்தராசாவைத் தலைமையாகக் கொண்ட 21 வைத்திய அதிகாரிகளும் ஊழியர்களும் இச் சேவையில் ஈடுபட்டு இலவச கண் சத்திரசிகிச்சையளித்தனர்.

## ''கிராமவளர்ச்சிக்கு இளைஞர் உதவவேண்டும்''

(மட்டுவில்)

''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற புனிதத் தன்மையை, கிராமங்கள் தோறும் இயங்கி வரும் சனசமூகநிலையங்களின் உறுப்பினர்கள் மனதில்கொண்டு செயற்படவேண்டும்.''

இவ்வாறு மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்த சனசமூக நிலையப் பொதுக்கூட்டத்தில் பேசிய சங்கத் தலைவர் திரு. என். குணவீரசிங்கம் கூறினர்.

சங்கமண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. குணவீரசிங்கம தொடர்ந்து கூறியதாவது: கிராமங்கள் மத்தியில், கிராம முன்னேற்ற சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்கள், கிராமிய வளர்ச்சிக்காகவே அமைக்கப்படுகின்றன.

இந்த இயக்கங்களில் துடிப்புள்ள இளைஞர்களே அங்கம் வகிக்கிருர்கள் அவர்கள் தத்தம் கிராம வளர்ச்சிக்கு தம்மாலான தொண்டைசெய்ய வேண்டும். இதன் மூலமே கிராமம் வளர்ச்சி அடைவதோடு மட்டுமல்ல, எமது இளைய சந்ததியினருக்கும் முன்னேடியாக அமையும் (க)

### ஆறுபேர் புதிய உறுப்பினர்

(மட்டுவில்)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குநர்சபைத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இத்தேர்தலில் கீழ்க்காண்போர் இயக்குனர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள் ரீ. இராஜநாயகம், ரீ அப்புத்துரை, பரமேஸ்வரன், க. ஆறுமுகம், சிதம்பரப்பிள்ளை, இராஜரத்தினம், கந்தசாமி.

முன்பு இயங்கிவந்த இயக்குனர்சபை உறுப்பினர் ஒருவரைத்தவிரஏனைய ஆறு உறுப்பினர்களும் புதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மாடு திருட்டு வழக்கில்

### கணவனும் மனைவியும் விடுதலை

(வவனியா)

மாடு திருட்டுவழக்கில், வவனியா மாவட்டநீதிபதி திரு. பற்றிக் பெர்னண்டோ, எதிரிகளான கணவனையும், மனைவியையும், விடுதலை செய்து தீர்ப்பளித்தார்,

இவ்வழக்கில் வவனியாவைச் சேர்ந்த நாகராசா என்பவருக்குச் சொந்தமான இருமாடுகளை திருடியதாக கே. சின்னையா அவரது மனைவி காலிங்கை ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகளின் சட்டத்தரணி வழக்கில். சமர்ப்பிச்சப்பட்ட சான்றுப் பொருட்களான இருமாடுகளையும் எதிரிகளுக்கே வழங்கவேண்டும் எனக் கோரியதைத் தொடர்ந்து இதுசம்பந்தமான விசாரணை டிசம்பர் 11ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மனோசிறிதாஸ் ஆஜரானர். வழக்காளி தரப்பில் சட்டத்தரணி எம். அம்பலம் ஆஜரானர். (க)

### விசேஷ தீபபூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் (நாச்சிமார்கோயில்) தேவஸ்தானத்தில் ஸ்ரீமகாலட்சுமி பூசையும் சுமங்கலிபிரார்த்தனையும் திருக்கார்த்திகை தீப விழாவும் எதிர்வரும்21-ந்திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அம்பாள் திரு உலாவும் இடம்பெறும்.

## நவ. 21-ல் நத்தார்-புதுவருட சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும், லியோ கழகமும் இணைந்து, யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தும் நத்தார் புத்தாண்டு சித்திரப் போட்டி, இம்மாதம் 21-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, கீழ்ப்பிரிவு; (6 - 10 வயது), இடைப் பிரிவு; (10 - 14 வயது), மேற்பிரிவு; (14 - 18 வயது) என மூன்று பிரிவுகளாக நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றும் மாணவ மாணவிகளுக்கு, சித்திரம் வரைவதற்கான அட்டைகளை யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் பரீட்சை மண்டபத்தில் வழங்கும். மற்றைய உபகரணங்களை போட்டியாளர்களே கொண்டுவருதல் வேண்டும்.

மேற்பிரிவில் பங்குபற்றும் மாணவர்களுக்கு மட்டும், சித்திரம் வரைவதற்கான, தலைப்புக்கள் கொடுக்கப்படும், மற்றையோர் தாம் விரும்பும் சித்திரங்களை வரையலாம்

இப்போட்டியில் வரையும் சித்திரங்கள் அனைத்தும், கண்காட்சியில் வைக்கப்பட்டு, பரிசில்கள் வழங்கப்படும். பரிசில்களை இலங்கையிலுள்ள தூதரகங்கள் வழங்குகின்றன. (இ)

### சிங்கை பிரதமர் சீன விஜயம்

பீக்கிங், நவ 10. சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான் யூ உத்தியோக விஜயமொன்றை மேற்கொண்டு சீனவுக்கு விஜயம் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஞானம் ஒற்றுமைக்கு இட்டுச் செல்கின்றது. அஞ்ஞானம் பல்வேறுபட்ட நிலைக்கு வழிசெய்கின்றது.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

# "தன்னையே தூய்மைப்படுத்தும் பணியில் மனிதன் ஈடுபடவேண்டும்"

## ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

(கொழும்பு)

மனிதன் கடவுளையோ- மதத் தலைவர்களையோ- மதசிந்தனைகளையோ நம்பாமல் சுயமுயற்சியின்மூலம் தம்மைத் தூய்மையாக்கும் நற்பணிகளில் ஈடுபட்டால் நிச்சயம் அவனுக்கு விமோசனம் கிடைக்கும்.

இவ்வாறு இலங்கைவந்துள்ள பிரபல தத்துவமேதை திரு. ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி கூறினுர்.

கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் ஐந்து தடவையாக உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர்மேலும் கூறியதாவது: நாம் வாழ்ந்து வரும் சமுதாயம் ஊழல், ஒழுக்கக்கேடு, ஒன்றுக்கொன்று முரண்பாடு ஆகிய கொள்கைகளைக் கொண்டுள்ளது; எனவே மனிதன் பிறர் உதவியின்றி தானாகவே தமது போக்கை மாற்றிக்கொண்டால் மட்டுமின்றி இந்நிலையை நீக்க முடியாது. ஒரு மதத்தை அல்லது ஒரு தத்துவத்தைக் கடைப்பிடிப்பதன்மூலம் இந்த நிலையை அடையமுடியாது. மனதில் ஏற்படும் மாற்றத்தினுல்தான் இந்த இலட்சியங்களை அடையமுடியும்.

ஒருவர் யதார்த்த பூர்வமாக தமது செயல்களை ஆராய்ந்து பார்ப்பாரேயானுல் தாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் தமது சுயநலத்திற்காகவே இருக்கும் என்று உணரக் கூடியதாகவே இருக்கும்.

ஒரு மனிதன் சுயநன்மைக்காக வாழ்வானேயானுல் அவன் வாழும் சமுதாயம் பரிசுத்தமாக இருக்கமுடியாது. ஊழல் மலிந்ததாகவே அச் சமுதாயம் இருக்கும். (இ)

## நமது நோக்கு

### நடவடிக்கை அவசியம்

கொழும்பு பல்கலைக் கழகக் கல்விப் பகுதியின் தமிழ்ப்பிரிவினை முற்றுக மூடிவிடுவதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

இது எவ்வளவு தூரம் உண்மை யென்பதை நாமறியோம். இவ்வித செய்திகள் வதந்திகளாயிருந்தாலுங்கூட ஈற்றில் உண்மை நிகழ்ச்சிகளாக முடிவதை நாமறிவோம்,

நடப்பு ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பகுதி ஒன்று புதிதாக அமைந்திருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தோம். ஆசிரியத் தொழிலே யாழ்ப்பாணத்தின் முக்கியதொழிலென்றும் கல்வியில் யாழ்ப்பாண மக்கள் கொண்டிருக்கும் பெருமதிப்பு இங்குள்ள பாடசாலைகளின் தொகையும் தரமும் புலப்படுத்துகின்றனவென்றும் ஊரெங்கும் பேசப்பட்டு வரும் உண்மையாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறை அமைக்கப்பட்டால் அது ஒரு பொருத்தமான, பெருந்தேவையான செயலாகும். பல்கலைக்கழக மான்யக்குழு சரியான செயலைச் சரியான இடத்தில் சரியான நேரத்தில் பூர்த்திசெய்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதுமல்லாமல் அக்குழுவிற்குப் பாராட்டுத்தெரிவிக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

இஃதிங்ஙனமாக, கடைசியாகக் கிடைத்த மூடுவிழாச் செய்தி உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் என்ற வகையில் முடிவது போலத்தெரிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று வாதாடியவர்கள் ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகமாக அமைய வேண்டுமென்று கேட்டதில்லை அப்படிக் கோரிஞல் கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்கள் சிங்களப் பல்கலைக் கழகங்களாக மாறுவதற்கு மறைமுகமாக ஆதரவு வழங்குவதாகக் கருதப்படுமல்லவா?

நாட்டின் பல்கலைக்கழகங்கள் ஒருமொழியின் அல்லது சமயத்தின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து பல்கலைக்கழகம் என்றபதத்தின் அடிப்படை நோக்கத்திற்கு முரண்பட்டதாகும்.

எந்தமதத்தவரும் எந்த இனத்தவரும் எம்மொழி பேசுபவரும் உயர்கல்வியிலும் - ஆராய்ச்சி செய்யும் - கலைக்கூடமாக விருக்கவேண்டுமென்பது பல்கலைக்கழகத்தின் சிறப்பியல்பு.

எல்லா வசதிகளும் எல்லாத்துறைகளும் எல்லாப் பீடங்களும் நாட்டில் உள்ள பல்வேறுபல்கலைக் கழகங்களில் இடம்பெறமாட்டா என்பதும் உண்மை. ஆயினும் மொழிகாரணமாக எந்த ஒருபகுதியை ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்துக்குரியது அல்லது அங்கிருந்து அகற்றப்பட வேண்டியதென்ற முடிவு, பல்கலைக்கழக அடிப்படை அம்சங்களுக்கு முற்றும் மாருனது. அதனுல் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு அசாதாரணமான அநீதி விளைவிப்பதாகவும் இருக்கும்.

அதுமட்டுமல்ல, நாட்டின் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அவசியந்தேவையான ஆசிரியர்களுக்குக் கல்வியில் பட்டப்படிப்பும், பட்டதாரி ஆசிரியருக்கு டிப்புளோமாப் படிப்பும் அளிக்க ஒரு பல்கலைக் கழகம் போதாத காரணத்தால் புதிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வித் துறையை வரவேற்ருேம். ஆயினும் கொழும்பில் இதுகாறும் நடைமுறையில் இருந்து வந்த கல்விப் பகுதி தொடர்ந்து நடத்தப்பட வேண்டிய அவசியத்தை நாம் வற்புறுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

நாட்டின் பல பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுப்பதால் என்ன பலன்? அவர்களுக்குக் கொழும்பில் இருக்கும் கல்வித்துறைக்கு உரிமை என்றும் உள்ளது. இந்த அடிப்படை உண்மையையும் உரிமையையும் பல்கலைக் கழக மான்யக் குழு என்றும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

சிங்கள மாணவர்கள் எத்துறையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியில் உரிமையுடையவர்களோ. அந்த உரிமை தமிழ் மாணவர்களுக்குக் கொழும்பிலும், பேராதனை முதலிய மற்றப் பல்கலைக் கழகங்களிலும் உண்டு.

வசதி, வசதியீனம் என்ற காரணங்கொண்டு தமிழ்ப் பகுதியை மூடி 'வீட்டுக்குத் திரும்புங்கள்' என்ற கட்டளை பிறப்பித்தல் சட்டவிரோதமானது; நியாயமற்றது; பாரபட்சமானதுங்கூட.

தமிழ் மாணவர் கல்வி பல வழிகளில் இடர்ப்பட்டிருக்கும் இவ்வேளையில் இவ்விதசெயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலாகும்.

## தர்மகர்த்தா சபை

(சாவகச்சேரி)

சுத்த சமரச சன்மார்க்க சாது சங்க சமாதி குருபீட தர்மகர்த்தா சபையின் உத்தியோகத்தர்கள் தெரிவு மறவன்புலோவிலுள்ள பெரிய குருநாதர் சிவஸ்ரீ சின்னத்தம்பிக் குருசுவாமிகளின் சமாதியில் இடம்பெற்றது. பொதுமக்களால் பின்வருவோர் சபையின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

காப்பாளர்:- திரு. என். இளையப்பா, தலைவர்:- திரு. நா. செல்லப்பா, உப தலைவர்: திரு க. வே. சரவணமுத்து, இணைச்செயலாளர்கள்:- திரு. வ. குமாரசாமி, திரு. த. குலசிங்கம். பொருளாளர்: செல்வி மலர் பொன்னம்பலம். உறுப்பினர்கள் 27 பேர். (அ)

## வ. போ. சபை கவனிக்குமா?

மன்னுர் அடம்பன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரியும் நானும், எனது சக ஆசிரியரும், அடம்பன் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடமை புரியும் இரு ஊழியர்களும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எங்கள் சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்காக வழமைபோல் திருக்கேதீஸ்வரம் பஸ்தரிப்பு நிலையத்தில் 1980-11-05 புதன் கிழமை பி. ப. 3-00 மணி தொடக்கம் பஸ்ஸிற்காக காத்திருந்தும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை மன்னுர் டிப்போ பஸ் சாரதிகளின் அசமந்தப் போக்கினுல் மறுநாள் மதியமே யாழ்நகர் வரநேர்ந்தது.

வது வீடு செல்லலாம் என்ற ஆசையுடன் இரவில் வெள்ளாங்குளத்தில் தரித்து நின்று மறுநாள்காலை சங்குப்பிட்டி செல்லும் பஸ்ஸில் எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

அன்றிரவு எமக்கு நல்ல படுக்கை வசதிகள் ஏற்படுத்தித்தந்தவர்கள் இதே மன்னுர் சாலையில் பணிபுரியும் சாரதியும் நடத்துனருமே.

மறுநாள் காலை மிகவும் சிரமத்திற்கு மத்தியில் சாலைக் கடன்களை வெள்ளாங் குளத்தில் முடித்து சங்குப்பிட்டியினூடாக வள்ளத்தின் மூலம் சென்று மீண்டும் பஸ்ஸில் யாழ் வீடுசேர பகல் 11-00 மணியாகிவிட்டது.

இதுபோன்ற அவலநிலை வேறெந்தப் பிரயாணிக்கும் ஏற்படாதிருக்குமாறு வ. பி. போ-ச நடவடிக்கை எடுக்குமா?

க. சீனிவாசகம்

அடம்பன்

## மக்கள் கருத்து

மன்னுர் பஸ் நிலையத்திலிருந்து பி. ப. 3-00 மணிக்கு புறப்பட்டு வழமையாக திருக்கேதீஸ்வரம் வந்து சங்குப்பிட்டி செல்லும் பஸ் (பாதை இல 812) அன்று திருக்கேதீஸ்வரம் வராமலேயே மாந்தை சந்தியூடாகச் சென்று விட்டது. இந்த பஸ்ஸிற்காக காத்திருந்த எங்களுக்கு பஸ் சென்றுவிட்ட செய்தி பி. ப 4-00 மணிக்கே தெரியவந்தது. பஸ்ஸில் பிரயாணிகள் அதிகமாக இருந்தபடியால் தான் அது திருக்கேதீஸ்வரம் வரவில்லை என்று எவரும் கூறிவிடமுடியாது. ஏனெனில் வழியில் மாந்தையிலிருந்து பல பிரயாணிகள் பஸ்ஸில் ஏறிச் சென்றுள்ளனர்.

சரி இன்னெரு பஸ் மன்னுரிலிருந்து பி. ப 5 00 மணிக்குப் புறப்படும் தானே என்று எமக்கு நாமே சமாதானம் கூறிக்கொண்டு காத்திருந்தோம். சுமார் 5.30க்கு நாம் எதிர்பார்த்த சங்குப்பிட்டி பஸ் வந்தது. 29ஸ்ரீ 116 இலக்கமுடைய அந்த பஸ் திருக்கேதீஸ்வரம் பஸ் நிலையத்தில் நிற்காமலேயே சென்றுவிட்டது. வளைவில் அந்த பஸ் வேகமாகத் திரும்பியபோது எம்மில் ஒருவர் தன் உயிரை கூட மதியாது பாய்ந்து அந்த பஸ்ஸில் ஏறிச்சென்று விட்டார்.

அந்த பஸ்ஸில் அதிகபிரயாணிகள் இருந்தது உண்மைதான். எனினும் நால்வர் அதில் பிரயாணம் செய்வது சிரமமாக இருக்கமுடியாது. மறுநாள் தீபாவளி நாம் மூவரும் சிறிய பயணப்பைகளுடன் நின்ருேம். சாரதி மட்டுமல்ல எவருக்கு நாம் யாழ்ப்பாணம் தான் செல்கிருேமென்பது இலகுவில் புரிந்துவிடும். இந்நிலையில் இதை நாம் மறித்தபோதும் பஸ் நிறுத்தப்படவில்லை. அன்றைய தினம் இதுதான் கடைசி பஸ் என்பதையும் எமது நிலையையும் சாரதி மனிதாபிமான முறையில் உணர்ந்திருந்தால் அன்றிரவே நாம் யாழ்நகர் சென்றிருக்கமுடியும்.

நமது விதியை நொந்து கொண்டு மாந்தை சந்திவரை வந்து இரவு 9.30 வரை காத்திருந்து [illegible]

### முதல்தடவை அல்ல

கடந்த சில தினங்களாக "ஈழ்நாடு" பத்திரிகையில் வெளிநாட்டுச் செய்திகள் கவலையீனமாக தவறுகளுடன் எழுதப்பட்டு வருவது குறித்து எனது விசனத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உதாரணமாக 6- 11 - 80 'ஈழநாடு' இதழில் 1888க்குப் பின் குடியரசுக்கட்சி வேட்பாளர் ஒருவர் ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது பெருந்தவருகும். ஜனுதிபதி கார்ட்டருக்கு முன்பு பதவியிலிருந்த நிக்சன் பேசார்ட் போன்ருேர்கூட குடியரசுக்கட்சியினரே உண்மை என்னவெனில் பதவியிலிருந்த ஜனநாயகக் கட்சி ஜனுதிபதி ஒருவர் 1888 க்குப்பின் தோற்கடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்பதாகும்.

இதே பத்திரிகையில் கடைசிப் பக்கத்தில் அமெரிக்க உபஜனுதிபதியாக இதுவரை பதவிவகித்து வந்தவர் மொண்டெஸ்கியு என்று கூறப்பட்டுள்ளது இதுவும் தவருகும். இதுவரை உப ஜனுதிபதியாக இருந்தவர் திரு. வோல்டர் மொண்டேல் என்பவராகும்.

பொ. கிருபானந்தன்

கொக்காம்பாலை

கரணவாய் வடக்கு.

(இக்குறைகளைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி. இனியும் இவ்விதபிழைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முயல்கிருேம்). -ஆ-ர்)

### யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்லூரி

கடந்த சில நாட்களுக்கு முன் வெளிவந்த 'ஈழநாடு' இதழில் யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் மருத்துவக்கல்லூரி தேவை. என்ற தலையங்கத்தைப் பார்த்து எழுச்சி கொண்டேன்.

யாழ். மாணவர்கட்கு இழைக்கப்படும் அநீதியை மனச்சாட்சியை தட்டி எழுப்பும்படி உறுதியாக எழுதி உள்ளீர்கள் பாராட்டுக்கள்.

மற்றவர்களால் மறக்கப்பட்ட ஒரு விடயம் உங்கள் மனதை நெருடியது ஆச்சரியமே. தங்கள் தலையங்கத்திற்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் ஒருமருத்துவக்கல்லூரியை எதிர்பார்ப்போம்.

வடகோவை

வரதராஜன்

## அனலைதீவில் டாக்டரின் சேவைக்குப் பாராட்டு விழா

(அனலைதீவு)

அனலைதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக உதவி வைத்திய அதிகாரியாக கடமையாற்றி இடமாற்றலாகிச் சென்ற பிரமஸ்ரீ ச, விசுவேசுவர ஐயரின் சேவையைப் பாராட்டி அனலைதீவு பொது ஸ்தாபனங்கள் பிரிவுபசார விழாவொன்றை நடத்தின.

ஒய்வுபெற்ற கிராம சேவையாளர் திரு. சு. இரத்தினசபாபதி தலைமையில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய மண்டபத்தில் விழா நடைபெற்றது. டாக்டர் விசுவேசுவர ஐயரும் பாரியாரும் விழா மண்டபத்துக்கு அனலைதீவு பிள்ளையார் கோவில் முகப்பிலிருந்து மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இக் கூட்டத்தில் சமாதான நீதவான் திரு. ஐ. வைத்திலிங்கம் பேசுகையில் உண்மையான சேவையாளர் ஒருவரை அனலைதீவு இழப்பது மறக்க முடியாத காரியம் என்ருர். அனலைதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. க. சிவனடியான் பேசுகையில் அனலைதீவின் வைத்திய சேவையில் திரு. விசுவேசுவரஐயர் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றி பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டார்.

வடலூர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. க. இளையதம்பி பேசுகையில் டாக்டரின் சேவையை அனலைதீவு மக்கள் மறக்க முடியாதது என்ருர்.

அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கச் சார்பில் திரு. வை. சாம்பசிவம் சதாசிவ மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கச் சார்பில் திரு. மு. வே. க. சிவஞானம் ஆசிரியர் வை குணனந்தன், திரு. க. நாகலிங்கம், திரு. ச. க. காசிலிங்கம், திரு. பொ. விசுவலிங்கம், திருமதி தங்கராசா ஆசிரியை திரு. மு. வே, மயில்வாகனம், திரு. வே. குமாரசாமி ஆசிரியர், திரு. க. துரைராசா ஆகியோர் உட்பட பலர் டாக்டரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

கவிஞர் ஆ. இராசேந்திரம் பாராட்டுப் பத்திரத்தை வாசித்துக் கையளித்தார். தமக்களிக்கப்பட்ட விழாவுக்கு டாக்டர் விசுவேசுவர ஐயர் நன்றி தெரிவித்துப் பேசினுர். தங்கப்பதக்கம் ஒன்றும் பரிசாக வழங்கப்பட்டது.

விழக்குழுச் செயலாளர் திரு. க. சிவஞானம் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினுர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுகாதாரப்பிரிவினர் திடீர்சோதனை

# சாவகச்சேரி மீன்சந்தை அல்லோல கல்லோலம்!

## பெரிய மீன்கள் புதைக்கப்பட்டன!

(மட்டுவில்)

சாவகச்சேரி மீன்சந்தைக்குள் திடீர் பரிசோதனையை மேற்கொண்ட சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பிரிவினர் ஆயிரக்கணக்கான பெரிய மீன்களை விற்பனை செய்ய விடாது தடுத்து அவற்றை குழி வெட்டிப் புதைத்தனர். இருதினங்களின் முன் இச் சம்பவம் இடம்பெற்றது.

சுமார் 5 ஆயிரம் ரூராவுக்கும் அதிகம் பெறுமதியான பெரியமீன்கள் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன.

இதைவிட சிறிய குஞ்சு மீன்களும் கூட மீன்சந்தையில் விற்பனைக்கு விடாது தடுத்து வெளியேற்றப்பட்டன.

சம்பவதினம் சாவகச்சேரி மீன் சந்தை சிறிது நேரம் அல்லோல கல்லோலப்பட்டு பின் வெறிச் சோடிப்போய் கிடந்தது. (க)

## 18 மீனவருக்கு றிமாண்ட்

(மன்னார்)

டைனமைட் பாவித்து மீன் பிடித்த 18 மீனவர்கள் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனர் இவர்கள் பாவித்த இரண்டு படகுகளும் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டன.

## உன்னத சின்னத்தைப் பெற்றார்

(அரியாலை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்ட கல்லூரிகளின் சாரணரின் வருடாந்த விழாவில் யாழ். பரியோவான் கல்லூரி கடற்சாரணர் யூனியன் பிரிவைச் சேர்ந்த செல்வன் டி. கே. பொன்னையா சாரணர் குழுவுக்கான அதி உன்னத சின்னமாகிய பச்சைவட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் பிரதமவிருந்திலராகக் கலந்து கொண்ட சாரணர் இயக்கத்தின் சிரேஷ்ட ஆணையாளர் திரு. எச். இரத்தினசூரியா இவ்விருதை வழங்கினார். வருடாந்த சாரணர் விழாவில் சுமார் 18 சாரணர் குழுக்கள் கலந்து கொண்டன.

## "மனித சடலங்களுக்கு ஏற்றப்படும் நச்சுஊசி மீன்களுக்கு ஏற்றப்பட்டிருந்தது"

### சுகாதாரப் பரிசோதகர் விளக்கம்

(மட்டுவில்)

''மனித சடலங்களுக்கு ஏற்றப்படும் நச்சு ஊசி ஏற்றப்பட்டதாலேயே, மீன்கள் வெட்டிப் புதைக்கப்பட்டன. 'புரோமலின்' என்ற இந்த நச்சு ஊசி ஏற்றப்பட்ட மீன்களால் பாவனையாளர்களுக்கு பெரும் ஆபத்துஏற்படும்.''

சாவகச்சேரி நகரசபை சுகாதாரபரிசோதகர் திரு. செல்வபாஸ்கரதுரைநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; மீன் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெரிய சுறு, விளை, திருக்கை, கும்பளா இதுபோன்ற பல்வேறு இன பெரிய மீன்களுக்கும் 'புரோமலின்' ஊசிமருந்து ஏற்றப்பட்டிருந்தது. இது இறந்த மனிதர்களின் உடலை விறைப்படையச் செய்யப்போடப்படும் ஒருவகை நச்சு ஊசி மருந்தாகும் இந்த ஊசி மருந்து ஏற்றினுல் இந்த மீன்கள் எத்தனை நாட்சென்றாலும், மீன் பழுதடைந்தாலும், மணம் இருக்காது, கல்லு மாதிரி இருக்கும். அமுக்கினுல் இரத்தம் சொட்டும், இது பாவனையாளர் சுகாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும்.

சிறிய மீன்களும் 'புரோமலின்' கலந்த நீரில் போடப்பட்டுள்ளன என்றும் இதன் காரணமாகவே அந்த மீன்களை விற்பனை செய்யவிடாது தடை செய்யப்பட்டு வெளியகற்றிப் புதைக்கப்பட்டது.

சூழல், சுகாதாரப்பாதுகாப்பு மிகமிக அவசியம். மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதே எமது கடமை. ஆகவே இப்படியான நாசவேலைகளை இடம் பெறுமல் செய்வதில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் சுகாதாரப்பரிசோதகர் தெரிவித்தார், (கு)

## மாணவர் சுற்றுலா

(அரியாலை)

யாழ்.பரியோவான் கல்லூரி கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர் கோஷ்டி இலங்கைச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர்.

ஆசிரியர்கள் திரு. சிவராசா, திரு. யுகபாலசிங்கம் ஆகியோர் தலைமையில் செல்லும் இக்கோஷ்டியினர் திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, நுவரேலியா, ஹட்டன், நாவலப்பிட்டி, கண்டி, மாத்தளை, அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள சரித்திரத் முக்கியதுவம்வாய்ந்த இந்து,பௌத்த ஆலயங்களையும், இப்பகுதிகளில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவிருக்கும் புதிய அபிவிருத்தித் திட்டங்களையும், கைத்தொழில் நிலையங்களையும் பார்வையிடுவர். (அ)

# இந்து நாகரிகக் கருத்தரங்கு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த் தொகுதிக் கல்வி வளநிலையம் நல்லூர்வட்டாரப் பாடசாலைகளிலுள்ள பன்னிரண்டாம் தர மாணவர்க்கான இந்துநாகரிகக் கருத்தரங்கை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 8-30 மணி முதல் மாலை வரை நடத்துகிறது.

நல்லூர் வட்டாரக் கல்வி அலுவலகர் திரு. கு. சோமசுந்தரம் தலைமையில் தொடக்க விழா நடைபெறும். பிரதம கல்வி அலுவலர் ஜனுப் எம். எம். மன்சூர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார். கனகரத்தின மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார்.

செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும் முதலாவது அமர்வு யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும்

பேராசிரியரின் தலைமைப் பேருரையைத் தொடர்ந்து தொல்பொருளியற்றுறைவிரிவுரையாளர் திரு. பொ. இரகுபதி 'இந்து நாகரிகம் ஒரு தொல்லியற் கண்ணேட்டம்' என்ற பொருளிலும், பேராசிரியர் கா. இந்திரபாலா 'நவீன இந்துமத இயக்கங்கள்' என்ற பொருளிலும் உரையாற்றுவர். இந்து நாகரிக விரிவுரையாளர் திரு ப. கோபாலகிருஷ்ணன் தொகுப்புரை நிகழ்த்துவார்.

இரண்டாவது அமர்வு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும். திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ. 'தமிழிலக்கியத்தில் இந்து சமயம்' பற்றியும், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. செ கிருஷ்ணராசா 'தென்கிழக்காசியாவில் இந்து மதம்' பற்றியும் விரிவுரையாற்றுவர். தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு, நா. சுப்பிரமணியம் தொகுப்புரை நிகழ்த்துவார்.

மாணவர்கள் வகுப்பறையிற் பெறும் அறிவை விரிவுபடுத்தவும் அரண்செய்யவும் கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தும் கல்விவள நிலையத்தின் நோக்கத்திற்கேற்ப இக்கருத்தரங்கை நல்லூர் வட்டாரக் கல்வி அலுவலர் திரு. கு. சோமசுந்தரம் கல்விவள நிலையப் பொறுப்பு அலுவலர்களின் ஆணையுடன் ஏற்பாடுசெய்துள்ளார்.

நாளை நடைபெறும் இரண்டு அமர்வுகளுக்கும் விரிவுரையாளர் திரு. ப. கோபாலகிருஷ்ணன், பேராசிரியர் கா. இந்திரபாலா ஆகியோர் தலைமை தாங்குவர். திரு. நா. சுப்பிரமணியம், திரு. வி. சிவசாமி, திருமதி ஞானு குலேந்திரன், திரு. க. சொக்கலிங்கம், திரு. க. சி. குலரத்தினம் ஆகியோர் விரிவுரையாற்றுவர். (இ)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 26ம் திகதி

செவ்வாய்க்கிழமை (11-11-80)

மேடம்: நேர்முகப் பரீட்சைக்கு இன்று உகந்த தினம். தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும். புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு.

இடபம்: நண்பர்கள் காலைவாரி விடக்காத்திருப்பர். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம் தவறுகள் நடப்பதன் மூலம் நிலைமையும் தடுமாறலாம்.

மிதுனம்: களஸ்திர வழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு. பெரியவர்கள் மதிப்பும் உண்டாம். இன்று எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும்.

கடகம்: ஆதரவு கொடுத்தவரே முதலில் கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கும். விருந்தினர்களின் வருகை வேதனையைத்தரலாம்.

சிங்கம்: பெரியவர் ஒருவரின் ஆதரவுகிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு கலைஞர்கள் போற்றப்படுவார்கள். பலவழிகளிலும் நன்மைகள் வந்துசேரும்.

கன்னி: கற்றதனுல் பயன் இன்று கைமேல்கிட்டும். புதிய கண்டுபிடிப்புக்களில் ஊக்கம் ஏற்படும். தூரத்துச் செய்தியொன்று உற்சாகத்தைத் தரும்.

துலாம்: அதிஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் கிட்டும் வரவிலும் உயர்வு காணப்படும்.

விருச்சிகம்: உறவுமுறையில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம். தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

தனுசு: பிள்ளைகளின் நடவடிக்கை கவலையைத் தரலாம். குடும்பத்தில் சிறு புயல் வீசும், கொடுக்கல் வாங்கல் விடயத்தில் கவனம் வேண்டும்.

மகரம்: வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும். கன்னல் மொழி பேசி காரியத்தைச் சாதிப்பீர்கள், மாணவர்களுக்கு இன்று உற்சாகமான தினம்,

கும்பம்; தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும், கடந்தகால நிகழ்ச்சிகள் அலைமோதும். சகோதர வழியால் சஞ்சலம் தோன்றும்.

மீனம்; இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும் சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கலாம். தாய்வழியால் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறும்

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## கைவண்ணம் கதைசொல்லும்

அமரர் வீ. கதிரவேற்பிள்ளை என்னும்போது அடக்கம், நேர்மை, கண்ணியம், சேவை மனப்பான்மை, தியாகம் என்பன பொதிந்த புன்முறுவலோடு கூடிய அந்த உருவம் எம் மனக்கண்களின் முன்வந்து நிற்கிறது. அன்னார் மறைந்து ஒருமாதம் முடிவுறும் இத்தினத்திலே அன்னாரையிட்டுச் சிந்தித்தல் ஏற்புடையதொன்ருகும்.

காரைநகர் இந்துக் கல்லூரியின் ஆய்வுகூட உதவியாளர் அவர் என்பது வெறும் சம்பிரதாயமே கல்லூரியின் வாழ்வே அவர் வாழ்வு எனப் பின்னிப் பிணைந்துவிட்ட ஒரு பிணைப்பு அவருடையது. கல்லூரியின் அபிவிருத்தி வரலாற்றிலே அமரர் கதிரவேற்பிள்ளையின் கைவண்ணம் காலங்காலமாய்க் கதைசொல்லி நிற்கும்.

காலம், நேரம், பணியின் தன்மை என்பவற்றை நோக்காது ''தன்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த அமரர் கதிரவேற்பிள்ளை காரைநகர் இந்துக்கல்லூரியின் உயிர் நாடியாக விளங்கினர் என்பது முழுதும் உண்மை.

கிராமத்தின் சுகதுக்கங்களிற் பங்குபற்றி, கிராமாபிவிருத்

(8-ம் பக்கம் பார்க்க)

த பிஞன்ஸ் கம்பெனி லிமிட்டெட்,

யாழ். கிளை

தேவை

பிஞன்ஸ் கம்பெனியின் ஊழியராகவோ அல்லது தனித்து சுதந்திரமாகவோ கடமையாற்றி, காணி விற்பனைப் பகுதியொன்றை ஆரம்பித்து, நடத்தக்கூடிய அனுபவம்வாய்ந்த ஊழியர் ஒருவர் தேவை.

விண்ணப்பதாரர்கள், அறிவுள்ளவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், குறிப்பிட்ட தொழிலில் அனுபவம்பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இருவர் அத்தாட்சிப்படுத்த வேண்டும். தெரிவுசெய்யப்படுவோருக்கு நல்ல சம்பளம் வழங்கப்படும்.

1980 நவம்பர் மாதம் 20-ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர், (Managing Director)

TFC

த பிஞன்ஸ் கம்பெனி லிமிட்டெட்,

3-வது மாடி, சிலிங்கோ மாளிகை,

ராணி வீதி, கொழும்பு-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## செழிப்போடு வளருங்கள்
## வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
## வளமான வாழ்விற்கேற்ற வங்கி

அதி விசேஷ நிலையான வைப்புத்திட்டங்கள். ஒவ்வொன்றும் உங்களின் தனிப்பட்ட தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டவை.

வருடத்திற்கு 20% முதிர்வடைந்ததும்-ஒரு வருடகாலத்திற்கு—
வருடத்திற்கு 18.6% மாதாமாதம் வட்டி — ஒரு வருடகாலத்திற்கு—
வருடத்திற்கு 15% முதிர்வடைந்ததும்—6 மாதத்திற்குப் பின்—
வருடத்திற்கு 14% (ரூபா. 500.000/- க்கு மேற்பட்ட தொகைக்கு)
3 மாதத்திற்குப் பின்—
வருடத்திற்கு 13% (ரூபா. 500,000/- ரும் ரூபா 100,000/-க்கும் உட்பட்ட தொகைக்கு)
வருடத்திற்கு 12% (ரூபா. 100,000/- க்கு உட்பட்ட தொகைக்கு)
3 மாதத்திற்குப் பின்—
வருடத்திற்கு 9% (ஆகக்குறைந்த வைப்புப்பணம் ரூபா. 25000/-)
7 நாள் அறிவித்தலின்பின்—

3 மாத கால வைப்புப்பணத்திற்கு வட்டி விகிதம் பேசி ஒழுங்கு செய்யலாம்.
அதி விசேஷ சேவைக்கு நற்பெயர் பெற்றவர்களான
எங்களுடன் வங்கிக் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி**

**வளமான வாழ்விற்கேற்ற வங்கி**

57, சேர் பாரன் ஜயதிலகா மாவத்தை,
கொழும்பு-1 தொலைபேசி: 28193/5

கிளை நிறுவனங்கள்:

கொள்ளுப்பிட்டி:- 26174
கொட்டாஞ்சேனை:- 23471
கண்டி:- 08—3163 & 08—3217
காலி:- 09—2377 யாழ்ப்பாணம்:- 276
மாத்தளை:- 0662-485
மாத்தறை:- 041—2819
கலேவெல:- 95
வெள்ளவத்தை:-86097

CEYLINCO ADS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். —லதா
**உலகம் சுற்றும் வாலிபன்**

**வெ ஸ் லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**ராணி சம்யுக்தா**
(புதிய பிரதி)

இன்று மட்டும்
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Peter Cushing in
**Dr. Who and the Daleks**
(Scope-Color)
12-11-80 முதல் ஒரே வானம் ஒரே பூமி

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
**தாயே உனக்காக**

அநேக இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
இதுவரை பார்க்காதவர்களுக்கு இது அரிய வாய்ப்பு!
**சாந்தி** யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
மகத்தான 16-வது வெற்றி வாரம்!
**நீ யா?** வெள்ளிவிழா வண்ணச்சித்திரம்

வெற்றி முழக்கமிடும் 6-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
**மீனவ நண்பன்**

75-வது நாளைநோக்கி வீறுநடைபோடுகிறது
**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 7-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

**WINDSOR**
(JAFFNA) DAILY 5 SHOWS
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00&9-30P.M. only

தான் செய்யாத குற்றத்திற்காக மெக்சிக்கோ சிறையில் 28 வருடங்கள் வாழ்கிறன் ஒரு கணவன். கணவனைச் சிறைக்கு அனுப்பியது பேரனின் சூழ்ச்சி என்பதை மனைவி உணர்கிறள், அன்பும், பண்பும் பதிபக்தியும் நிரம்பிய மனைவி தியாகங்கள் பல புரிகிறள். இருந்தும் வீரதீரசூரன் புருெஷன் ஒருவனல் மாத்திரம் அவனை மீட்க முடிகிறது.

CHARLES BRONSON' ROBERT DUVALL, JILL IRELAND
in
**"BREAK OUT"**
Jailed for a crime he never committed - Only Charles Bronson can get him out!
Adults. Color Action.


## மானிப்பாய் இந்து வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் கல்லூரிகளுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இரண்டாம் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மானிப்பாய் வீரர்கள் இடைவேளையின்முன் மூன்று கோல்களை போட்டிருந்தனர்.

இடைவேளையின் பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினர் மிகவும் சிறப்பாக விளையாடி ஒரு கோலைப் போட்டனர் மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பில் தலைவர் ரெக்ஸ் ரேய்மன்ட் உற்சாகமாக விளையாடினர். திரு. வ கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். (இ)

## சாவ. இந்து வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாம் பிரிவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி யாழ். மத்திய கல்லூரியை 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளையின்போது யாழ். மத்திய கல்லூரி ஒருகோலைப் போட்டிருந்தது இடைவேளையின் பின்னர் சாவகச்சேரிக் கல்லூரிக் கோஷ்டியினர் திறமையாக விளையாடி அடுத்தடுத்து இருகோல்களைப் போட்டு இறுதியில் 2-1 கோல்களால் வெற்றியீட்டினர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி சார்பில் காமிம், தயாளன் மிகவும் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளனர் திரு. இ. மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார். (இ)

## மகாஜன வெற்றி

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றுவரும் வடமாகாணப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென்ற புதன்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன. மகாஜனக் கல்லூரி 5—1 கோல்களால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் ஒஸ்மானியாவுக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இந்துக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றிபெற்றது.

## மத்திய கல்லூரி வென்றது

(அரியாலை)

யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ். பரி. யோவான் கல்லூரி கூடைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் மத்திய கல்லூரிக் கோஷ்டி 70:45 புள்ளிகளால் வெற்றியீட்டியது.


**ஹரன்** யாழ்ப்பாண
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
**ஆலயமணி**
(புதிய பிரதி)


# உதைபந்தாட்டப் போட்டிகள்

(அரியாலை)

வட்டுக்கோட்டை தொழில் நுட்ப நிறுவனம் மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ். பரியோவான் கல்லூரி மோட்டோ பைல் மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மோட்டோ பைல் மாணவர் கோஷ்டி 1 0 கோலால் வெற்றியீட்டியது.

பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிக்கு ஆசிரியர் என். வசந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

0 0 0

(பலாலி)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான 1-ம், 2-ம் பிரிவுகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் 1-ம் பிரிவுப்போட்டியில் யூனியன் கல்லூரி 5-2 கோல்களாலும், 2-ம் பிரிவுப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரி 2-1 கோல்களாலும் வெற்றிபெற்றுள்ளது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும், இளவாலை சென். கென்றீஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் சென். கென்றீஸ் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெற்றது.

0 0 0

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 2-ம் 3-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி மூன்றும் பிரிவில் 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

இரண்டாம் பிரிவு தலா ஆறு கோல்களைப் பெற்று ஆட்டம் வெற்றிதோல்வியின்று முடிவுற்றது. இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

0 0 0

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினுல் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் யூனியன் கல்லூரிக்கும் நடேஸ்வராக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யூனியன் கல்லூரி 2—1 கோல்களால வெற்றியீட்டியது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற முதலாம் பிரிவுப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

0 0 0

(பலாலி)

வயாவிளான் ம. ம. வித்தியாலயத்திற்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையிலான 2ம் பிரிவு, 3ம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் வயாவிளான் ம. ம. வித்தியாலயம் வெற்றியீட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்துடனை 2ம் பிரிவுப் போட்டியொன்றிலும் வயாவிளான் ம. ம. வித்தியாலயம் 7—0 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது.

(பலாலி)

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடந்த 1ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் தலா 2 கோல்களைப் போட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திற்குமிடையிலான போட்டியில் இந்துக் கல்லூரி 10—0 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது.

வயாவிளான் ம. ம. வித்தியாலயத்திற்கும், கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையே நடந்த போட்டியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது.

வயாவிளான் ம. ம. வித்தியாலயத்திற்கும், அளவெட்டி அண்ணு வி. கழகத்திற்கு இடையிலான சிநேகபூர்வமான போட்டியொன்றில் ம. ம. வித்தியாலயம் 2—0 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது.

## கடற்கரையில் காணப்பட்ட சடலம்

(மன்னர்)

கடற்கரைப்பகுதியில் இனம் தெரியாத ஒரு ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது தலைமன்னர் குருசுப்பாடு கடற்கரையிலேயே இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சடலம் இன்னும் அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை.

கடற்கரையில் காணப்பட்டதால் இச்சடலம் இந்திய மீனவரின் சடலமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக தலைமன்னர் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு / 15104

கனகசபை சபாரத்தினம், நவக்கிரி வழக்காளி

எதிராக

இராமன் சிவலிங்கம், திருநெல்வேலி.
சிவலிங்கம் பெண் சோதி, புத்தூர் மேற்கு.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு 15104-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1980-ம் ஆு மார்கழி மீ 2ந் உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 2125ம் 1976-5-26 தொடக்கம் 1978-10-10 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 567-97½.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கு இறை. வேம்பாப்புலம் நி. பர. 20 குளி 11 2/10 இதில் மேற்குப் பக்கமாக நில. பர. 10 இதில் கிழக்குப் புறமாக நில. பர. 2½யும் வான் பயிர்களும் இந்தப் பரப்பு இரண்டரைக்கும் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் சதாசிவத்துக்குரிய இதன் மிகுதி ஆதனம் வடக்கு சின்னத்தம்பி வடிவேலுக்குரிய ஆதனம். மேற்கு நாகன் முருகனின் ஆதனம். தெற்கு ஒழுங்கை இதுடங்கலும்.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

வேல்பதி, புத்தூர்,
29-10-80.

7307


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில்கா
ரேடியோ அன் ரீ.வி
டெக்னிஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி

உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவாகிலும்
உடன்சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணை நகர் அருள்மிகு செந்தில்கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தர்ஷஷ்டித் திருவிழாவில் இன்று இரவு 7 மணிக்கு வித்துவான் சி. குமாரசாமி ''பேராசை யெனும் பிணியுட்பிணிபட்டு'' என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## நூல்கள் அன்பளிப்பு

(மன்னார்)

அமெரிக்கத் தூதரகத்தின் சார்பில் 25 விலை உயர்ந்த புத்தகங்கள் மன்னார் பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பொது நூலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் வைத்து, மன்னாருக்கு வந்திருந்த அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் திரு. எச். ஏ. ஹெகில்மன் னார்பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. ஏ. செந்தில்நாதனிடம் புத்தகங்களைக் கையளித்தார்.

# 4 பிரிட்டிஷ் பிரஜைகளும் ஈரானில் பணயம்!

லண்டன், நவ. 10

ஈரானில் நான்கு பிரிட்டிஷ் பிரஜைகள் பணயம் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களின் விடுதலைக்கான நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் அரசு தீவிரமாக ஈடுபட்டுவருகிறது என்றும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் லோட் ஹரிங்டன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரஜைகள் நால்வரும் ஈரானில் குற்றம் இழைத்தமைக்காகவே கைது செய்யப்பட்டுள்ளனர் என ஈரானியர்கள் தெரிவித்த போதிலும் உண்மையில் அவர்கள் நால்வரும் பணயக் கைதிகளாகவே அங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் விடுதலை செய்யப்படும்வரை பிரிட்டிஷ்—ஈரான் நல்லுறவு நிலவாது என்றும் அவர் கூறியுள்ளார். (இ)

# 'பட்ஜட்' விவாதம்:

## 'அமிர்' இன்று ஆரம்பிப்பார்

(கொழும்பு)

நிதி அமைச்சரின் வரவு — செலவுத்திட்ட உரை மீதான விவாதம் இன்று பாராளுமன்றத்தில்ஆரம்பமாகிறது. காலை 10 மணிக்கு சபை கூடும்போது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விவாதத்தை ஆரம்பிப்பார்.

தொடர்ந்து நடைபெறும் இவ்விவாதத்தின் இரண்டாம் மதிப்பின்மீதான வாக்கெடுப்பு இம்மாதம் 19-ந் தேதி இரவு 8 மணிக்கு நடைபெறும் நல்லூர் உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அன்றையதினம் எதிர்க்கட்சிகளின் தரப்பில் விவாதத்தை முடித்து வைத்து உரைநிகழ்த்துவார். நிதியமைச்சரின் பதிலுரையை அடுத்து அன்று வாக்கெடுப்பு நடைபெறும்.

குழுநிலை விவாதம் பின்னர் 25-ந் தேதி ஆரம்பமாகி டிசம்பர் 19-ந் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். 22-ந் தேதி இரவு 8 மணிக்கு மூன்றும் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு நடைபெறும்.

சனி, ஞாயிறுதவிர தினமும் காலை10மணிமுதல் இரவு8மணி வரைவிவாதம்நடைபெறும் ம

## எல்லைப் பிரச்னை கொலையில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

எல்லைப் பிரச்னைக்கு மாங்குளத்தைக் சேர்ந்த செல்லையா துரையப்பா என்ற 55 வயது விவசாயி பலியானார்.

சந்தேக நபரான இவரது மருமகன் ஐயம்பிள்ளை நந்தாவன் இதுவரை கைது செய்யப்படவில்லை.

சம்பவதினம், இறந்தவரின் மகன் ராமச்சந்திரன், இயற்கைக் கடனை கழிக்க வெளியில் சென்ற போது சந்தேகநபர் தடியால் அடிக்க, அவர் குளறியதாகவும், சத்தம் கேட்டு இறந்தவர் ஓடிவர, சந்தேக நபர் வீட்டிற்குச் சென்று காட்டுக் கத்தி எடுத்து வந்து வெட்டியதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மாங்குளம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (க)

## நாளை நடக்கும் கதாப்பிரசங்கம்

(மானிப்பாய்)

நல்லை ஞானசம்பந்த குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நாளை புதன்கிழமை மாலை ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் 'சூரபத்மன் வதை' என்னும் பொருள் பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் இந்நிகழ்ச்சி இடம்பெறும். (அ)

## அன்ரன் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ்சார்ஜன்ட்அன்ரன் கொலை வழக்கு நாளை பிற்பகல் 2மணிவரை பின்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பின்போடப்பட்டுள்ளது. (க)

## கொள்ளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் ஆஜரானார்கள்.

கடந்த 4ம் திகதி சட்டத்தரணி எஸ். சோமசுந்தரம் மூலம், கோட்டில் ஆஜராகி பழைய பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த உதயணன் வந்திருந்தார். 1ம், 2ம் எதிரிகள் ஆஜராகவில்லை.

எதிரிகளை 81ம் ஆண்டு பெப்ரவரி 20ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டார். (க)

## கைவண்ணம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கான ஆக்கப் பணிகளிலும் தம்மை இவர் அர்ப்பணித்திருந்தார் என்பதற்குச் சான்று வேண்டியதில்லை. ''கதிரவேற்பிள்ளை மறைந்துவிட்டார்'' என்ற அதிர்ச்சியால் காரைநகர்இந்துக்கல்லூரி மாணவர், ஆசிரியர்களோடு தாமும் ஒன்றாக ஊரவர்களும் கதறியும், கண்ணீர் மல்கியும் நின்ற காட்சி எம் மனத்தை விட்டகலாது

அன்னார் தொட்ட பணிகளைத்தொடர்ந்து செய்து அந்த நல்லாத்மா சாந்திபெறச் செய்வோமாக.

—க. கா. நடராசா.

## யாழ். மாநகர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### யார் பொறுப்பு

''மதிப்பீடு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரம் பெற்ற எத்தனையோ வேலைகள் இன்னும் செய்யப்படவில்லை. ஆனால் 80 ம் ஆண்டு நவம்பர் 10 ம் தேதி வரை மதிப்பீடு செய்யப்படாத அங்கீகரிக்கப்படாத வீதி வேலைகளுக்கு கூட பொருட்கள் பறிக்கப்பட்டு வேலைகள் நடக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதல்வரா? அல்லது பொறியியலாளரா பொறுப்பு. மக்கள் இதனை அறியவேண்டும்'' என்றார்.

முதல்வா: வீதியின்பெயரை சொல்லுங்கள்.

திரு. சண்முகராசா: இங்கு சொல்லவில்லை. காரியாலயத்தில் சொல்கின்றேன்.

திரு. தம்புகந்தையா; அங்கீகரிக்கப்படாமல் வேலை நடப்பது பாரதூரமான குற்றம்.

### வீதியின் பெயர் என்ன?

டாக்டர் ஏபிரகாம்: வீதியின் பெயரை சொல்லவேண்டும்.

திரு. சண்முகராசா: நிதிக் குழுவில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுக்கும் தெரிய வேண்டும்.

திரு. தம்புகந்தையா: நாம் உண்மையை அறியவேண்டும்.

முதல்வர்: வீதியின் பெயரை சொல்லுங்கள்.

திரு. சண்முகராசா: சபையில் சொல்வதை விரும்புகிறீர்களா?

முதல்வர்: சொல்லுங்கள்.

பல உறுப்பினர்கள் ஒரே முறையில் எழுந்து வீதியின் பெயரை வெளியிடவேண்டும் என வலியுறுத்தினர்கள்.

திரு. சண்முகராசா; நிதிக் குழுவும் சபையும் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளுக்குத் தான் பொறுப்பு. இந்த வேலை அங்கீகரிக்கப்படாமல் நடந்து ளது. யார் பொறுப்பு. நீங்கள் விரும்பினல் வீதிப் பெயரை சொல்கிறேன்.

முதல்வர்: உணர்ச்சிவசப்பட்டு பேசாமல் பெயரை சொல்லுங்கள்.

திரு. சண்முகராசா: சபை சரியான முறையில் நடக்க வேண்டும். வீதியின் பெயர் பழம் ரோட்டு. இது அங்கீகரிக்கப்பட்டதா?

முதல்வர்: பழம் ரோட், கந்தர்மடமா?

திரு. சண்முகராசா: 20ம் வட்டாரம்.

முதல்வர்: இது பற்றிய அறிக்கை அடுத்த கூட்டத்தில் வெளியிடப்படும்.

பலத்த விவாதத்தின்பின்னர், உப வரவுசெலவுத்திட்டம் நிறைவேறியது.

[சபையில் நடந்த விவாதம் பற்றிய விபரம் நாளை இதழில் வெளிவரும்].

## அமரர் குலசிங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி

கில் முதல்நாள் நீதிமன்றத்தில் எடுத்துக்கூறிய சமர்ப்பணங்களை கேட்ட பின்புதான் அரச சட்டத்தரணிகள் எல்லோரும் சேர்ந்து மாநாடுகள் நடாத்தி வழக்கை தயாரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இவர் ஒரு பிரபல சட்டத்தரணியாகவிளங்கி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்தார்.

## தேசிய எதிர்ப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்படும்.

இலங்கை வர்த்தகஊழியர் சம்மேளனம், லங்கா தொழிற் சங்க சம்மேளனம் ஆகியவை பகல் 11 மணி முதல் 1 மணி வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி ஜெயசீலன்

இவர் மல்லாவி துணுக்காய் அரசினர் பாடசாலை ஆசிரியையும், மாங்குளம் ஜெயசீலனின் அருமை மனைவியும், பூர்ணிமா, சுதர்ணிமா, தர்சிணிமா ஆகியோரின் அன்புத் தாயாரும் அச்சுவேலி வீரசிங்கம் தம்பதிகளின் மகளும், நெடுந்தீவு சின்னத்துரை, காலஞ்சென்ற திருமதி சின்னத்துரையின் மருமகளும், தர்மசங்கரி (நைஜீரியா), கணேசசங்கரி, இராசசங்கரி, ஆனந்தசங்கரி, சகாதேவசங்கரி, திருமதி மதியாபரணம் ஞானசம்பந்தன், பரதசங்கரி (லண்டன்), ஞானசங்கரி, திருமதி லோகநாயகி இரத்தினம், திருநல்நாயகி, துருவசங்கரி ஆகியோரின் சகோதரியும், றூபி, ஜெயமணி, இராசசூரியர் (பிரான்ஸ்), ஜெயராசா, சகோதரி ஒலிவியா, ஜெயரட்னம், ஜெயபாக்கியம், ஜெயமலர், ஜெயந்திரன், ஜெனிற்ரு, சபின்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இராசவீதி அச்சுவேலியில் இன்று 11-11-80 செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

7319

## மரண அறிவித்தல்

### திருமுருகுப்பிள்ளை இராசரத்தினம்

வட்டுக்கோட்டை சிவன்கோவிலடியைச் சேர்ந்த திருமுருகுப்பிள்ளை இராசரத்தினம் 10-11-80 ல் காலமானார். இவர் வாக்கர் அன் சன் மின்சார இலாகா தலைமைப் பொறுப்பாளராவார். இவர் நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அரசகுலரத்தினம், திருமதி ச. அரியசுவர்ண புவனராணி, திருமதி பு. சிந்திரபூபதி, திருமதி க. குணபூஷணம், திரு. மகேஷ்வரன் (யாழ். அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தந்தையும், காலம்சென்ற திருமதி கற்பகம் கந்தையா, காலம் சென்ற திரு. விசுவலிங்கம் (பொலிஸ் பகுதி), காலம் சென்ற திரு நவரத்தினம், இளைப்பாறிய தபால்அதிபர் மு. சுப்பிரமணியம், காலம்சென்ற திருமதி வள்ளியம்மை பழனியப்பா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வைத்திய கலாநிதி வ. சந்திரசேகரம்பிள்ளை சுங்க இலாக்கா சி. புஷ்பபாலர், வைத்திய கலாநிதி க. காசிப்பிள்ளை உள்நாட்டு இறைவரி இலாக்கா திருமதி சடாட்சர நாயகி மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 11-11-80 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

7321

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB 8948/78 The Eelanaadu P. B. No. 49. Grame Eelanaadu. Phone, 389.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org